# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>

## <u>அசல் வழக்கு எண்.51/2018</u>

PW2 – திரு. அருள்சூசை                                        நாள். 15.03.2024

(1969ம் ஆண்டில் 44வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.S.துரைமுருகன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

<u>2 மற்றும் 3 பிரதிவாதிகளின் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை ஏதேனும் வந்ததா என்றால் வரவில்லை. என்னை சாட்சியம் அளிக்க யார் அழைத்து வந்தார்கள் என்றால் நானாக வந்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை வழக்கறிஞரிடம் யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். இவ்வழக்கு நடைபெறும் விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் ஊரில் பேசிக் கொண்டனர். என்னை வாதி தான் சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார். தாவா சொத்தின் சர்வே எண், நான்குமால் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை 2ம் பிரதிவாதி தரப்பில் 1ம் பிரதிவாதிக்கு ஒப்படைப்பு பட்டா கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதியும், 1ம் பிரதிவாதியும் தாவா சொத்து தொடர்பாக என்ன சட்டவடிக்கை எடுத்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளனர். சட்ட விதிகளுக்கு உட்பட்டு அனுபவம் செய்து

வரும் 1ம் பிரதிவாதிக்கு ஒப்படைப்பு பட்டா வழங்கப்பட்டது என்றும் வாதியோ அவரது முன்னோர்களோ அனுபவம் செய்து வந்து இருந்தால் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் என்றும் அவ்வாறு செய்யாததால் 1ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை